## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 27/2022 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | சந்திரா | நாள் | 12.08.2024 |
| கணவர் பெயர் | செல்வராஜீ(லேட்) | | |

**பிரதிவாதி தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை:-**

1) இவ்வழக்கில் நான் எனக்காகவும், 2ம் வாதிக்காகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரிதான். இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தையும் நான் படித்து பார்த்துதான் இவ்வழக்கில் குறியீடு செய்துள்ளேன் என்றால், சரிதான். இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை சொத்து விவரத்தில் 1 சென்ட் நிலம் எங்களுக்கு பாத்தியப்பட்டுள்ளது என சொல்லியுள்ள நிலையில், வா.சா.ஆ.1 பாகபிரிவினை பத்திரத்தில் எங்களுக்கு 1/2 சென்ட் நிலமும், பிரதிவாதிக்கு 1/2 சென்ட் நிலமும் ஆக 1 சென்ட் நிலம் தடவழிக்காக பொதுவில் பாத்தியப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்திற்கு எதிராக தற்போது நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

2) என் கணவர் கடந்த 21.08.2017ம் தேதியில் இறந்துவிட்டார் என்றால், சரிதான். என் கணவர் இறந்ததற்கு பின்னிட்டு, நான்கு ஆண்டுகள் கழித்து என் கணவரின் பாக சொத்தில் நானும், என் மாமியாரும், என் மகளும் சேர்ந்து எங்களது பாகத்தை பொறுத்து, 2ம் வாதி பெயரில் பதிவு செய்யப்பட்ட பாகபாத்திய விடுதலை ஆவணம் வா.சா.ஆ.2 ஐ ஏற்படுத்தப்படுத்தி கொடுத்துள்ளோம் என்றால், சரிதான். என் கணவரின் சட்டப்படியான வாரிசுதாரர்கள் என்ற அடிப்படையில் மேற்படி நானும், என் மாமியாரும், என் மகளும் பாகபாத்திய விடுதலை ஆவணம் ஏற்படுத்தி கொடுத்துள்ளோம் என்றால், சரிதான்.

3) மேற்படி வா.சா.ஆ.2 ஆவணத்தின் சொத்து விவரத்திலேயே ச.எண்.121A/1ல் 2-வது தாக்கில் 0.1 சென்ட் நிலத்தில் பொதுவில் பேர் பாதி 0.0.1/2 சென்ட் நிலத்தில் 11 லிங்ஸ் அகலமுள்ள பொதுதடவழி பாகம் குறித்து, சக்குபந்தி விவரங்களுடன் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரியல்ல.

4) நான் தாக்கல் செய்துள்ள பாகபிரிவினை ஆவணம் மற்றும் பாக விடுதலை ஆவணம் ஆகிய இரண்டிலும் ச.எண்.121A/1ல் பொதுதடவழிக்காக 0.0.1/2 சென்ட் மட்டும் தான் உள்ளதாக சொல்லப்பட்டுள்ள நிலையில், அதற்கு எதிராக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. என் கணவருக்கு பாகபிரிவினை படி பாத்தியப்பட்ட அதே சொத்து விவரம் தான் 2ம் வாதி பெயரில் அளிக்கப்பட்டுள்ள பாக பாத்திய விடுதலை ஆவணத்திலும் கண்டெழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான். ஆனால் மேற்படி 1/2 சென்ட் நிலத்தை 2017க்கு முன்பே என் கணவர், தனசேகரிடமிருந்து விலைக்கு வாங்கிவிட்டார்.

5) தனசேகரிடமிருந்து என் கணவர் கிரயம் பெற்றதாக சொல்லும் நிலையில், மேற்படி கிரயம் தொடர்பாக ஆவணம் ஏதாவது உள்ளதா என்றால், இல்லை. தாவா 1–வது அயிட்ட சொத்து விவரத்தில் 2–வது தாக்காக நாங்கள் குறிப்பிட்டுள்ள 0.1 சென்ட் நிலத்தை பொறுத்து எங்கள் உரிமையை காண்பிக்க ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால், இல்லை. என் கணவர் உயிருடன் உள்ளவரை பிரதிவாதியுடன் சுமூக உறவில்தான் இருந்தார் என்றால், சரிதான். அவ்வாறு எந்த ஆவணமும் இல்லாத நிலையிலும், என் கணவர் இறந்துவிட்ட நிலையிலும், பிரதிவாதியிடமிருந்து 1/2 சென்ட் நிலத்தை என் கணவர் கிரயம் பெற்றதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல.

6) ச.எண்.121A/1ல் பொது தடவழிக்காக உள்ள 1 சென்ட் நிலத்தில் 1/2 சென்ட் நிலத்தை பொறுத்து, பிரதிவாதிக்கும் உரிமையுள்ள நிலையில், மேற்படி 1 சென்ட் நிலத்திற்கும் நாங்கள் மட்டுமே உரிமையாளர்கள் என வழக்குரையில் கூறியுள்ளது ஏற்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல. மேற்படி என் கணவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை என் மகனான 2ம் வாதிக்கு எங்கள் குடும்பத்தினர் பாக பாத்திய விடுதலை பத்திரம் அளித்துள்ள நிலையில், நான் சொல்வது போல் உண்மையில் என் கணவர் பிரதிவாதியிடமிருந்து மேற்படி 1/2 சென்ட் நிலத்தை கிரயம் பெற்றிருந்தால், அவரிடம் அது தொடர்பான ஆவணங்களை ஏற்படுத்தியிருப்போம் என்றாலும், மேலும் அது குறித்து பாக பாத்திய விடுதலை பத்திரத்திலும் குறிப்பிட்டிருப்போம் என்றாலும்,

சரியல்ல.

7) தற்போது வரை பிரதிவாதிக்கு மேற்படி 1 செண்ட் நிலத்தில் பொதுவில் பாதி உரிமை உள்ளது என்றால், சரியல்ல.

(பிரதிவாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/—திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.